# ADDENDUM TO FORM G

## IN THE CORPORATE RESOLUTION PROCESS OF
## RAN INDIA STEELS PRIVATE LIMITED

(Under sub-regulation (1) of regulation 36A of the Insolvency and Bankruptcy Board of India (Insolvency Resolution Process for Corporate Persons) Regulations, 2016)

This is an Addendum to Form G published on October 31, 2025 for extension of timelines.

**The revised timelines shall be as follows**

| SL. | RELEVANT PARTICULARS | |
|---|---|---|
| 1. | Last date for receipt of expression of interest | December 01, 2025 |
| 2. | Date of issue of provisional list of prospective resolution applicants | December 05, 2025 |
| 3. | Last date for submission of objections to provisional list | December 10, 2025 |
| 4. | Date of issue of final list of prospective resolution applicants | December 12, 2025 |
| 5 | Date of issue of information memorandum, evaluation matrix and request for resolution plans to prospective resolution applicants | December 12, 2025 |
| 6. | Last date for submission of resolution plans | January 12, 2026 |
| 7. | Process email id to submit Expression of Interest | cirp.ranindia@gmail.com |

**Note:** All other details not specifically amended by this publication shall remain same as per the Form G dated October 31, 2025

**Sd/-**
**P Bala Subramanian**
**Resolution Professional of Ran India Steels Private Limited**
**IBBI Registration** No. IBBI/IPA-001/IP-P-02867/2024-2025/14404
**AFA valid up to** December 31, 2025
85/3, Sukkaliyur, Karuppampalayam Village,Karur, Tamil Nadu ,639003
Date: November 16, 2025,  Place: Karur



தோட்டக் குழு, நீர்வளக் குழு, மேலாண்மைக் குழு, பணம் கணக்கு குழு, பாதுகாப்புக் குழு, கல்விக் குழு என தனித்தனியாக குழுக்கள் அமைக்கப்பட்டு 1,200 ஆண்டுகளுக்கு முன்பே உத்திரமேரூர் ஊராட்சி நிர்வாகம் செயல்பட்டதை கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.



காஞ்சி மாவட்டத்தில் உள்ள வாலாஜாபாத் (சிவபுரம்) சைவ கோயில்கள் சூழ்ந்து காணப்படுகிறது. அருகே உள்ள வடக்குப்பட்டு பகுதியில் தொல்லியல் துறை மூலம் அகழ்வாராய்ச்சி நடைபெற்று வருகிறது. அங்கு மணல்மேடு, பழங்கால சிலைகள் கண்டறியப்பட்டுள்ளன.



### திருப்போரூர் அருகே வெடித்து சிதறிய

# பயிற்சி விமானத்தின் கருப்பு பெட்டி மீட்பு

**தாம்பரம் விமானப்படை தளத்துக்கு அனுப்பிவைப்பு**

**திருப்போரூர்**

திருப்போரூரை அடுத்த நெம்மேலியில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக உப்பு தொழிற்சாலை வளாகத்தில் விழுந்துவெடித்துசிதறியபயிற்சி விமானத்தின் கருப்பு பெட்டி மற்றும் சிதறிய விமான பாகங்களை, விமானப்படைத் துறையினர் மீட்டு தாம்பரம் விமானப்படை தளத்துக்கு கொண்டு சென்றனர்.

சென்னையை அடுத்த தாம்பரம் விமானப்படை பயிற்சி தளத்திலிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் புறப்பட்ட பயிற்சி விமானம், திருப்போரூர் அருகே வானில் பறந்து கொண்டிருந்தபோது, விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறால் விமானியின் கட்டுப்பாட்டை இழந்தது. பயிற்சி விமானம் நெம்மேலி புறவழி சாலை அருகே உள்ள உப்பு தயாரிப்பு தொழிற்சாலை வளாகத்தில் விழுந்து வெடித்து சிதறியது. முன்னதாக, விமானி பாராசூட் மூலமாக விமானத்தில் கீழே குதித்து உயிர் தப்பினார்.

விமானம் விழுந்த இடத்தில் சிதறிய விமான பாகங்களை விமானப் படையினர் சேகரித்தனர். விபத்து நடந்த இடத்தில், தாம்பரம் விமானப் படையினர் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வந்து, மீட்பு பணிகளை மேற்கொண்டனர். 2-வது நாளாக நேற்று 15 அடி பள்ளத்தின் சேற்றில் புதைந்த விமானத்தின் கருப்பு பெட்டி உள்பட பிற பாகங்களை தேடும் பணிகளில் ஈடுபட்டனர். இதில், 2 பொக்லைன், ஒரு கிரேன் மூலம் மீட்பு பணிகள் நடைபெற்றன. காலை 7 மணிக்கு தொடங்கிய பணிகள் பகல் 12:30 மணி வரை நீடித்தது. இதில், சேற்றில் சிக்கியிருந்த கருப்பு பெட்டியை மீட்ட விமானப் படை வீரர்கள் பாதுகாப்பாக எடுத்து சென்றனர். விமானத்தின் பிற பாகங்களை சேகரித்தனர்.

இதனிடையே, செங்கை கோட்டாட்சியர் கணேஷ்குமார், திருப்போரூர் வட்டாட்சியர் சரவணன் உள்ளிட்ட அதிகாரிகள் சம்பவ இடத்தை பார்வையிட்டனர். பின்னர், விமானப் படை அதிகாரிகளுடன் ஆலோசித்தனர். வெடித்து சிதறிய விமானத்தின் கருப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ளதாகவும். அடுத்தகட்ட பணிகளை விமானப் படை துறையினர் மேற்கொள்வர் எனவும் வருவாய்த் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். மீட்கப்பட்ட கருப்பு பெட்டி, சேகரிக்கப்பட்ட மற்ற பாகங்கள் தாம்பரம் விமானப்படை தளத்துக்கு வாகனத்தின் மூலம் கொண்டு செல்லப்பட்டது. கருப்பு பெட்டி டெல்லி விசாரணை பிரிவுக்கு கொண்டு செல்லப்பட உள்ளதாக போலீஸார் தெரிவித்தனர்.



திருப்போரூரை அடுத்த நெம்மேலியில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக உப்பு தொழிற்சாலை வளாகத்தில் விழுந்து வெடித்து சிதறிய பயிற்சி விமானத்தின் கருப்பு பெட்டி மற்றும் விமான பாகங்களை பொக்லைன் இயந்திரம் மூலம் மீட்கும் பணியில் ஈடுபட்ட விமானப்படை வீரர்கள்.

# அண்ணா பட்டு வளாகத்தில் அமைச்சர் ஆய்வு

**காஞ்சிபுரம்**

காஞ்சிபுரத்தில் சீரமைக்கப்பட்டு விற்பனை தொடங்கப்பட்டுள்ள அண்ணா பட்டு வளாகத்தில் அமைச்சர் ஆர்.காந்தி நேற்று ஆய்வு செய்தார்.

காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்துக்குச் சொந்தமான அண்ணா பட்டு வளாகம் வள்ளல் பச்சையப்பன் சாலையில் அமைந்துள்ளது. இந்த வளாகம் அரசு மான்யம் ரூ.2.25 கோடி, சங்கத்தின் பங்கு ரூ.75 லட்சம் மூலம் புனரமைக்கப்பட்டது.

இந்த வளாகத்தை நவ. 13-ம் தேதி காணொலிக் காட்சி மூலம் முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். இங்கு அமைச்சர் ஆர். காந்தி நேற்று ஆய்வு செய்தார்.

இந்த விற்பனை வளாகத்தில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தயாராகும் சிறந்த கைத்தறி ரகங்கள் ஒரே குடையின் கீழ் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வில் எம்எல்ஏக்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட வருவாய் அலுவலர் பா. முருகேசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி, காஞ்சிபுரம் ஒன்றியக் குழுத் தலைவர் மலர்க்கொடி குமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

காஞ்சி மாவட்டம் செவிலிமேட்டில் நடைபெற்ற 72-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் அமைச்சர் ஆர். காந்தி பங்கேற்றார். விழாவில், மொத்தம் 1,340 பயனாளிகளுக்கு ரூ. 13.58 கோடி மதிப்பிலான பல்வேறு கடன்கள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டன. இதில், 1,111 உறுப்பினர்களுக்கு ரூ. 10.96 கோடி மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக்குழு கடன், 37 பயனாளிகளுக்கு ரூ. 26 லட்சம் மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்புக் கடன், 53 பயனாளிகளுக்கு ரூ. 39 லட்சம் மதிப்பீட்டில்பயிர்க்கடன்உள்படபல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.

விழாவில் காஞ்சி, வாலாஜாபாத் ஒன்றியக் குழுத் தலைவர்கள் மலர்க்கொடி குமார், ஆர்.கே. தேவேந்திரன், மத்திய கூட்டுறவு வங்கி கூடுதல் பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர் ஆ.க. சிவமலர், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் கோ.யோகவிஷ்ணு பங்கேற்றனர்.

### அனுமதிக்கப்படாத பாதையில் இயக்கப்படும் மினிபஸ்களை தடை செய்ய வலியுறுத்தி

# ஆட்டோ ஓட்டுநர் சங்கம் கண்டன ஆர்ப்பாட்டம்

**திருப்போரூர்**

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேருந்து நிலையத்தின் முன்பு பல்வேறு தொழிற்சங்கங்கள், அனைத்து ஆட்டோ ஓட்டுநர் சங்கத்தின் சார்பில், மாவட்ட செயலாளர் க.ஜெகதீசன் தலைமையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், திருப்போரூரை மையமாக கொண்டு, ஆட்டோ ஓட்டும் தொழிலை மேற்கொண்டு வரும் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும், அனுமதி பெறாத வழித்தடங்களில் சட்ட விரோதமாக இயக்கப்படும் ஒப்பந்த அடிப்படையிலான மினி பேருந்துகளை தடை செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிற்சங்க நிர்வாகிகள் கண்டன உரையாற்றினர். இந்த ஆர்ப்பாட்டத்தில், அனைத்து ஆட்டோ ஓட்டுநர் சங்கத்தின் மாநிலத் தலைவர் காசி விஸ்வநாதன், செயலாளர் எம்.ஜஹாங்கீர், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மாநில துணை தலைவர் வெங்கடேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## குடிநீர் டிராக்டர் மோதி 2 வயது குழந்தை உயிரிழப்பு

**திருவள்ளூர்**

பழவேற்காடு செஞ்சியம்மன் நகரை சேர்ந்தவர் சுரேஷ்குமார். இவருக்கு திருமணமாகி 2 வயதில் விசிதா என்ற மகள் உள்ளார். இந்நிலையில் பழவேற்காடு பகுதியில் தனியார் தண்ணீர் விநியோகிப்பாளர் தேவன் என்பவர் டிராக்டரில் சென்று ஒவ்வொரு தெருவுக்கும் தண்ணீர் விநியோகம் செய்து வருகிறார்.

நேற்று செஞ்சியம்மன் நகர் பகுதியில் விநியோகம் செய்ய சென்றபோது டிராக்டரின் சக்கரம் அருகே விசிதா நின்றுகொண்டிருந்தார். தண்ணீர் விநியோகம் செய்த பின் வாகனத்தை இயக்கியபோதுசக்கரம் அடியில்ஏதோ சிக்கியது போல சத்தம் கேட்டதை அடுத்து உடனடியாக வாகனத்தை நிறுத்தி பார்க்கும்போது சக்கரத்தில் சிக்கி விசிதா சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளது தெரிந்தது.

இது குறித்து போலீஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது, இதற்கிடையே ஓட்டுநரிடம் போலீஸார் விசாரித்தபோது, அவர் ஏற்கெனவே இந்த குழந்தை சக்கரம் அருகில் எப்போதும் நிற்பதாக பெற்றோரிடம் எச்சரிக்கை செய்ததாக தெரிவித்தார். போலீஸார் குழந்தையை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீஸார் வாகனத்தை பறிமுதல் செய்து, ஓட்டுநர் தேவன் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



பி.எஸ்.அப்துர் ரஹ்மான் கிரசன்ட் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் அண்டு டெக்னாலஜி கல்வி நிறுவனத்தில் நடந்த சர்வதேச மாநாட்டில் வர்ஜீனியா பல்கலைக்கழக பேராசிரியர் அம்மாசி பெரியசாமி, துணைவேந்தர் டி.முருகேசன், பதிவாளர் ராஜா உசேன், பேராசிரியர்கள் எஸ். ஹேமலதா, அசோக் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### புற்றுநோய் உயிரி தொழில்நுட்பம் குறித்து

# கிரசன்ட் இன்ஸ்டிடியூட்டில் சர்வதேச கருத்தரங்கம்

**சென்னை**

வண்டலூரில் உள்ள பி.எஸ். அப்துர் ரஹ்மான் கிரசன்ட் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் அண்டு டெக்னாலஜி, அமெரிக்காவின் வர்ஜீனியா பல்கலைக் கழகத்தின் டபிள்யூ.எம்.கெக் செல்லுலார் இமேஜிங் சென்டருடன்இணைந்து, அடுத்ததலைமுறை கண்டுபிடிப்புகளுக்கான புற்றுநோய் உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்பத்தின் பங்குகள் குறித்த 5-வது சர்வதேச மாநாட்டை நவ.14 மற்றும் 15-ம் தேதிகளில் நடத்தியது.

இதன் தொடக்க விழாவில், உயிரியல் அறிவியல் பள்ளியின் பேராசிரியர் எஸ்.ஹேமலதா வரவேற்றார். இணை பேராசிரியர் அசோக் குமார் புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் கல்வி சங்கத்தை (ACER) அறிமுகப்படுத்தினார். துணைவேந்தர் டி.முருகேசன் தலைமை உரை நிகழ்த்தினார். பதிவாளர் ராஜா உசேன் சிறப்புரை நிகழ்த்தினார்.

அமெரிக்க வர்ஜீனியா பல்கலைக்கழகத்தின் உயிரியல், உயிரி மருத்துவ பொறியியல் பேராசிரியர் அம்மாசி பெரியசாமி தொடக்க உரை நிகழ்த்தினார். நிறைவா, இணைப் பேராசிரியர் நீசர் அகமது நன்றி கூறினார்.

இந்த மாநாட்டில் இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கருத்துரை வழங்கினர். மேலும் புற்றுநோயில் தற்போதைய ஆராய்ச்சி மற்றும் புற்றுநோய்க்கான மருந்துகளை உருவாக்குதல் மற்றும் உயிரி தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மூலம் நிலையான தீர்வுகளை வழங்குவது குறித்து விவாதித்தனர்.

நாடு முழுவதும் இருந்து 350-க்கும் மேற்பட்ட இளம் ஆராய்ச்சியாளர்கள் இந்த மாநாட்டில் ஆராய்ச்சிப் படைப்புகளை சமர்ப்பித்தனர். சிறந்த வழங்குநர்களுக்கு விருதுகளும், சிறந்த புதுமையான ஆராய்ச்சிகளுக்கு இளம் விஞ்ஞானி விருதுகளும் வழங்கப்பட்டன.

### ஊத்துக்கோட்டை அருகே வீட்டில் தனியாக இருந்த

# பெண்ணை கொலை செய்து நகைகள் திருட்டு

**மர்ம நபர்களுக்கு போலீஸ் வலைவீச்சு**

**திருவள்ளூர்**

ஊத்துக்கோட்டையை அடுத்த சூளைமேணி பகுதியைச் சேர்ந்தவர் சரஸ்வதி (55). இவருக்கு சுரேந்தர், மனோஜ் என இரண்டு மகன்கள் உள்ளனர். இருவரும் திருமணமாகி குடும்பத்துடன் சென்னையில் வசித்து வருகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கணவர் உயிரிழந்த நிலையில் சரஸ்வதி மட்டும் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார். இதையறிந்த மர்ம நபர்கள் நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டுக்குள் நுழைந்து சரஸ்வதியை இரும்பு கம்பியால் பலமாக தாக்கி கொலை செய்து விட்டு அவர் அணிந்திருந்த தங்க செயின், கம்மல், மொபைல் போன் ஆகியவற்றை திருடிச் சென்றனர்.



சரஸ்வதி

இந்நிலையில் காலை நீண்ட நேரமாகியும் சரஸ்வதி வீட்டில்இருந்துவெளியேவராததால் அக்கம் பக்கத்தினர் வீட்டின் அருகே சென்று பார்த்த போது சரஸ்வதி ரத்தகாயங்களுடன் தரையில் இருந்ததை பார்த்து அவரது மகன்களுக்கும், போலீஸாருக்கும் தகவல் தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் போலீஸார் வழக்குப் பதிவு செய்து கைரேகை நிபுணர்கள், மோப்ப நாய் உதவியுடன் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட மர்ம நபரை பிடிக்க ஆய்வாளர் தலைமையில் 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

sankaranarayanan.s@hindutamil.co.in

வரி விளம்பரங்கள்

தொழில்

முகவர்கள் தேவை

Join Us for a Profitable Joint Venture! Landowners with 1 Ground to 5 Acres — partner with Jentora for premium residential and commercial developments.Call/WhatsApp: 7358582976, Jentora Builders Pvt. Ltd.

வீடு / நிலம்

அடுக்குமாடி குடியிருப்பு(பழையது)

Nelson Manickam Rd 3 BHK with parking. 8547878623

மணப்பந்தல்

மணமகள் தேவை

தமிழ்

பிராமின் வயது 53 அரசுபணி மாத வருமானம்- 90000 மறுமணம், விதவை, Divorcees மற்றும் குழந்தை உள்ளவர்கள் சம்மதம். Contact No:95003 93990, 75980 93646 புரோக்கர்கள் தவிர்க்கவும்.

MBA / 33 yrs / Male / 42 LPA seeks qualified Hindu girl contact: 95438 15803

# சவீதா பொறியியல் கல்லூரியில் 'டிரஸ்டீன் 2025'

**சென்னை**

சவீதா பொறியியல் கல்லூரியில் புதுமை, திறமை மற்றும் கூட்டு மனப்பான்மை ஆகியவற்றின் மகத்தான கொண்டாட்டமான 'டிரஸ்டீன் 2025' நடைபெற்றது.

டிரஸ்டீன் கொண்டாட்டம் கடந்த நவ.7-ம் தேதி தொடங்கப்பட்டது. பிரவர்தக் ஐஐடிஎம் ஆலோசகரான லெப்டினென்ட் ஜெனரல் கரன்பீர் சிங் பிரார் இந்நிகழ்ச்சியை தொடங்கிவைத்தார். ரெனோ நிசான் தொழில்நுட்பம், வணிக மையத்தின் துணைத் தலைவர் ஈவா ஜெம்ஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இவ்விழாவில் 10,513-க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள், 100-க்கும் மேற்பட்ட கல்லூரிகளைச் சேர்ந்த 2,853-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்த ஒன்று கூடினர். 80-க்கும் மேற்பட்ட பட்டறைகள், 170-க்கும் மேற்பட்ட நிகழ்வுகளில் போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

ஐஐடிக்கள், எம்ஐடி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் போன்ற முன்னணி கல்வி நிறுவனங்களின் புகழ்பெற்ற நிபுணர்கள், தொலைநோக்கு பார்வையாளர்கள் குழுவினர் மற்றும் முன்னணி நிறுவனங்களின் நிபுணர்கள் பங்கேற்று வழிநடத்தினர்.



சவீதா பொறியியல் கல்லூரியில் டிரஸ்டீன் கொண்டாட்டத்தை பிரவர்தக் ஐஐடிஎம் ஆலோசகரான லெப்டினென்ட் ஜெனரல் கரன்பீர் சிங் பிரார் தொடங்கி வைத்தார்.

**போஸ்டர் விளக்கக் காட்சி**

டிரஸ்டீன் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக ஹேக்கத்தான் போட்டி நடைபெற்றது. பங்கேற்பாளர்களின் புதுமையான யோசனைகள், செயல்பாட்டு மாதிரிகள், மென்பொருள் தீர்வுகளை வழங்கினர். மாணவர்கள் உருவாக்கிய மாதிரி சாதனங்கள், ஆராய்ச்சி திட்டங்கள் ஆகியவை பார்வைக்கு வைக்கப்பட்டன. மேலும்சிக்கலான ஆராய்ச்சி, புதுமையான கருத்துகளை தெளிவுபடுத்தும் வகையில் போஸ்டர் விளக்கக் காட்சியும் நடைபெற்றது.

## மயானத்துக்கு பொதுபாதை கேட்டு சாலை மறியல்

**மதுராந்தகம்**

மொறப்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட அபிராமிபுரம் மக்களின் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மயானத்துக்கு செல்ல பொதுவழி இல்லை. தனி நபர் இடத்தை பாதையாக பயன்படுத்தி வந்ததால், மக்கள் மதுராந்தகம்-எல் எண்டத்தூர் சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். போலீஸார் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததால் அனைவரும் கலைந்து சென்றனர்.

**Before Deputy Commissioner-cum-Chairman, Micro Small Enterprises Facilitation Council, Jalandhar, Punjab. Office of Deputy Commissioner, DAC Complex, Ladowali Road, Jalandhar.**

**Claim Case No. 822**
**M/s Legend International, C-73, Sport & Surgical Complex Kapurthala Road Jalandhar- 144021 Claimant**
**M/s Vishnu Traders, No. 14/27, South Perumal Koti Street, Vadapalani, Chennai (Tamilnadu)- 600026 Respondent**
**To,**
**M/s Vishnu Traders, No. 14/27, South Perumal Koti Street, Vadapalani, Chennai (Tamilnadu)- 600026**

Whereas the above-named claimant filed the above noted claim case under MDMED Act 2006. But inspite sending various notices by registered post as well as through your registered email address, you have failed to appear before this Council.
You are hereby directed to appear before the Council on **10.12.2025 at 10-00 AM** personally or through duly authorized representative, failing which the case will be heard and decided in your absence in accordance with law.
Given under my hand and seal of Council on this the **16.10.2025 day of 2025**

Member Secretary
Micro Small Enterprises Facilitation Council,
Distt. Industries Centre Jalandhar

தமிழ்நாடு அரசு
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை**
செங்கல்பட்டு மாவட்டம்

மின்னணு முறையில் இரு உறைமுறை அடிப்படையிலான ஒப்பந்த அழைப்பு
ந.க.எண் 0258/2020/அ11 நாள். 14.11.2025

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) / பகுதி II/இன் மூலம் செங்கல்பட்டு மாவட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியம், சீக்கிணாங்குப்பம் கிராம ஊராட்சி, சிக்கிணாங்குப்பம் கிராமத்தில் மலக் கசடு மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யும் நிலையக் கட்டடம் (10 KLD அளவு) கட்டும் பணி

1. ஒப்பந்த அழைப்பிற்கான தோராய மதிப்பீடு ரூ. 284.90 லட்சம்
2. செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்புத் தொகை ரூ.2,85,000/-
3. ஒப்பந்த நமூனாக்களை மின்னணு கொள்முதல் முறையில் www.tntenders.gov.in என்னும் இணையத்தளத்தில் 17.11.2025 முதல் 03.12.2025 வரையிலான காலத்தில் பதிவேற்றம் செய்யலாம்.
4. ஒப்பந்த நமூனா இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய இறுதிநாள் மற்றும் நேரம் : 03.12.2025 பி.ப. 3.00 மணிவரை.
5. ஒப்பந்த நமூனாக்களின் தொழில்நுட்ப உறைகள் மின்னணு முறையில் பதிவிறக்கம் செய்யப்படும் நாள் மற்றும் நேரம். 03.12.2025 பி.ப. 5.00 மணிமுதல்.
6. முழுமையான விவரங்கள் சம்மந்தப்பட்ட ஒப்பந்த நமூனாக்களில் www.tntenders.gov.in என்னும் இணையத்தளத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது

திட்ட இயக்குனர்,
மா.ஊ.வ.முகமை, செங்கல்பட்டு.

செ.ம.தொ.இ/6176/ஒப்பந்தப்புள்ளி/2025

**படிவம் G-க்கான இணைப்பு**
**ரன் இந்தியா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட்**
**நிறுவனத்தின் தீர்வு செயல்பாட்டில்**
(திவால்நிலை மற்றும் திவால்நிலைகுழு ஆப் இந்தியா (நிறுவனங்களின் கலைப்பு செயல்முறை) விதிமுறைகள், 2016-ன் ஒழுங்குமுறை 36A-ன் துணை-பிரிவு(1)-ன்கீழ்) காலக்கெடுவை நீட்டிப்பதற்காக 31.10.2025 அன்று வெளியிடப்பட்ட படிவம் G-ன் பிற்சேர்க்கையாகும்
**திருத்தப்பட்ட காலக்கெடுவின் விவரம் பின்வருமாறு**

| வ. எண். | தொடர்புடைய விபரங்கள் | |
|---|---|---|
| 1. | விருப்ப வெளிப்பாடு கோருதல் பெறுவதற்கான கடைசி தேதி | 01.12.2025 |
| 2. | வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வெளியிடப்படும் தேதி | 05.12.2025 |
| 3. | தற்காலிக பட்டியலில் ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 10.12.2025 |
| 4. | வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் தேதி | 12.12.2025 |
| 5. | தகவல் குறிப்பாணை வெளியிடப்பட்ட தேதி மதிப்பீட்டு அணி மற்றும் வருங்கால தீர்மான மனுதாரர்களுக்கு தீர்வுத் திட்டத்திற்கான கோரிக்கை | 12.12.2025 |
| 6. | தீர்மான திட்டங்களை சமர்ப்பிப்பு கடைசி நாள் | 12.01.2026 |
| 7. | விருப்ப வெளிப்பாடு சமர்ப்பிக்க வேண்டிய மின்னஞ்சல் id | cirp.ranindia@gmail.com |

**குறிப்பு :** இந்த வெளியீட்டால் குறிப்பாக திருத்தப்படாத மற்ற அனைத்து விவரங்களும் 31.10.2025 தேதியிட்ட படிவம் G -ன்படி அப்படியே இருக்கும்.

**Sd/-**
**P பாலசுப்பிரமணியன்**
**ரன் இந்தியா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்கான தீர்மான நிபுணர்**
**IBBI பதிவு எண். :** IBBI/IPA-001/IP-P-02867/2024-2025/14404
**AFA செல்லுபடியாகும் காலம்** டிசம்பர் 31, 2025
85/3, சுக்காலியூர், கருப்பம்பாளையம் கிராமம், கரூர், தமிழ்நாடு, 639003
நாள் : 16.11.2025, இடம் : கரூர்

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by Ra.Babu Vijay at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).



**அணைகளின் நீர் மட்டம் நிலவரம்**

குண்டேரிப்பள்ளம் : 41.75 அடி
பெரும்பள்ளம் : 30.84 அடி
வரட்டுப்பள்ளம் : 28.31 அடி



**பட்டுக்கூடு விலை விவரம்**

| | | தருமபுரி | சேலம் | ராசிபுரம் |
|---|---|---|---|---|
| வரத்து | : | 1,457.900 கி. | 158.200 கி. | 420.900 கி. |
| அதிகபட்ச விலை | : | ரூ.784 | ரூ.799 | ரூ.770 |
| குறைந்தபட்ச விலை | : | ரூ.453 | ரூ.761 | ரூ.691 |
| சராசரி விலை | : | ரூ.707 | ரூ.775 | ரூ.732 |



### வாக்காளர் பட்டியல் தொடர்பான சந்தேகம், புகார்களை தெரிவிக்க

# ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்டங்களில் உதவி மையங்கள் அமைப்பு

**ஈரோடு/சேலம்/நாமக்கல்**

ஈரோடு மாவட்டத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், பொது மக்கள் வாக்காளர் பட்டியல் தொடர்பான சந்தேகங்களையும், புகார்களையும் தெரிவிக்க உதவி மைய தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம், என ஆட்சியர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோடு ஆட்சியர் அலுவலகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் தொடர்பான கூட்டம் நேற்று நடைபெற்றது. ஆட்சியர் கந்தசாமி தலைமை வகித்தார். 8 வாக்காளர் பதிவு அலுவலர்கள், ஏற்கெனவே நியமிக்கப்பட்ட 29 உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள், புதியதாக நியமிக்கப்பட்ட 15 உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் உள்ளிட்ட 44 உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதில், கணக்கெடுப்பு படிவங்கள் தொடர்பான அனைத்துப் பணிகளையும் வரும் டிசம்பர் 4-ம் தேதிக்குள் நிறைவேற்ற வேண்டும் என ஆட்சியர் கந்தசாமி அறிவுறுத்தினார். மேலும், வாக்காளர் பட்டியல் தொடர்பான சந்தேகங்களையும், புகார்களையும் தெரிவிக்க உதவி மைய தொலைபேசி எண்களை பொது மக்கள் தொடர்பு கொள்ளலாம் என ஆட்சியர் அறிவித்துள்ளார்.

அதன்படி, ஈரோடு மாவட்ட இலவச தொடர்பு மையம் – 1950, மாவட்ட உதவி மைய எண் - 90425 80535, ஈரோடு கிழக்கு தொகுதி - 0424 2251618, ஈரோடு மேற்கு தொகுதி -0424 2254224, மொடக்குறிச்சி தொகுதி – 0424 22500123, பெருந்துறை தொகுதி- 04294 220577, பவானி தொகுதி - 04256 230334, அந்தியூர் தொகுதி - 04256 260100, கோபி தொகுதி - 04285 222043, பவானி சாகர் தொகுதி - 04295 220383 ஆகிய எண்களில் உதவி மையங்களை பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம், என அறிவிக்கப்பட்டுள்ளது.



சேலத்தை அடுத்த அயோத்தியாப்பட்டணம் பேரூராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த உதவி மையத்தில் ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் பிருந்தாதேவி.

**சேலத்தில்...**

சேலம் அயோத்தியாப் பட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த உதவிமையத்தின்செயல்பாடுகள் குறித்து, ஆட்சியர் பிருந்தாதேவி ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் அவர் கூறியதாவது:

வாக்காளர் பட்டியல் தீவிரத் திருத்தப்பணிகள் குறித்து வாக்காளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் சேலம் ஆட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகங்கள், மாநகராட்சி தலைமை அலுவலகம், மாநகராட்சி மண்டல அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், பேரூராட்சி அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள், கிராம நிர்வாக அலுவலகங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், காவல் நிலையங்கள், தீயணைப்பு நிலையங்கள், வனத்துறை அலுவலகங்கள், வட்டார வேளாண் விரிவாக்க மையங்கள், மகளிர் சுய உதவிக்குழு அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து முக்கிய அரசுத் துறை அலுவலகங்களிலும் உதவி மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன, என்றார்.

**நாமக்கல்லில்...**

நாமக்கல், மோகனூர், பரமத்தி, திருச்செங்கோடு மற்றும் குமாரபாளையம் வட்டாட்சியர் அலுவலகங்களில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளை ஆட்சியர் துர்காமூர்த்தி ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

நாமக்கல் மாவட்டத்தில் 6 சட்டப்பேரவை தொகுதிகளிலும் உள்ள வாக்காளர்களுக்கு சிறப்பு தீவிர திருத்த கணக்கெடுப்பு படிவம் குறித்த தகவல்களுக்கு வட்டாட்சியர் அலுவலகங்களில் கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன், உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் இது தொடர்பான விவரங்களுக்கு ராசிபுரம் (தனி) தொகுதிக்கு மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்பொருள் பாதுகாப்பு அலுவலர் முருகனை 94450-00232 என்ற எண்ணிலும், வட்டாட்சியர் அலுவலகத்தை 04287-222840 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். சேந்தமங்கலம் தொகுதிக்கு மாவட்ட சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் சுந்தரராஜனை 94454-61743 என்ற எண்ணிலும், வட்டாட்சியர் அலுவலகத்தை 6282228034 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

நாமக்கல் தொகுதிக்கு நாமக்கல் ஆர்டிஓ சாந்தியை 9445000431 என்ற எண்ணிலும், வட்டாட்சியர் அலுவலகத்தை 04286-233901 என்ற எண்ணிலும், பரமத்தி வேலூர் தொகுதிக்கு மாவட்ட பிற்படுத்தப்பட்ட நல அலுவலர் கிருஷ்ணவேணியை 9445477850 என்ற எண்ணிலும், வட்டாட்சியர் அலுவலகத்தை 04268-250099 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

திருச்செங்கோடு தொகுதிக்கு கோட்டாட்சியர் லெனினை 9445000432 என்ற எண்ணிலும், வட்டாட்சியர் அலுவலகத்தை 04288-253811 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். குமாரபாளையம் தொகுதிக்கு மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் சுரேஷ்குமாரை 7338801265 என்ற எண்ணிலும், வட்டாட்சியர் அலுவலகத்தை 04288-246256 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம், என்றார்.

# விவசாயத்துக்கு பயனளிக்கும் வேப்ப மரம்

### கன்றுகளை இலவசமாக பெற அழைப்பு

**மேட்டூர்**

அசாடிராக்டின் பயன் பாட்டுக்காக வேம்பினைப் பரவலாக்கம் செய்திடும் வகையில் வேப்ப மரக்கன்றுகள் இலவசமாக வேளாண்மைத் துறையின் வாயிலாக வழங்கப்படுகின்றன, என மேச்சேரி வட்டார வேளாண் உதவி இயக்குநர் சரஸ்வதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

'மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்' திட்டம் மண் வளத்தை மேம்படுத்துவதையும், ரசாயனமற்ற விவசாயத்தை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்ட புதிய வேளாண் திட்டமாகும். ரசாயனங்களின் பயன்பாட்டைக் குறைத்து மண்நலம் காக்க 'வயல் சூழல் ஆய்வு' அடிப்படையில் பூச்சி மேலாண்மை செய்வது குறித்து விவசாயிகளுக்கு உரிய அறிவுரைகளும் பரிந்துரைகளும் வழங்கப் படுகின்றன. அசாடிராக்டின் பயன் பாட்டுக்காக வேம்பினைப் பரவலாக்கம் செய்திடும் வகையில் வேப்ப மரக்கன்றுகள் இலவசமாக வேளாண்மைத் துறையின் வாயிலாக வழங்கப்படுகின்றன.

வேப்ப மரக்கன்றுகள் நடவு செய்தால் சுற்றுச் சூழல் பாதிப்படையாது. பூஞ்சாண நோய், நூற்புழுக்களையும் கட்டுப்படுத்தும். அந்துப் பூச்சிகளை மலடாக்கும். முட்டைகளை பொறிக்க விடாமல் தடைசெய்யும். வேம்பின் வாசனை பூச்சிகளை வரவிடாமல் செய்யும் தன்மை யுடையது. கூட்டுப்புழு மற்றும் புழுவின் வளர்ச்சியை தடுக்கும். நன்மை செய்யும் பூச்சிகளை பாதிக்காது.

வேப்பங்கொட்டை கரைசல் மூலம் பாக்டீரியா நோய்கள், நெல் பாக்டீரியா கருகல் நோய், இலையுறை கருகல் நோய், நெல் துங்ரோ வைரஸ் நோய் (குட்டைப்புல் நோய்), தக்காளி இலைக்கருகல் நோய், சாம்பல் நோய், மிளகாய் இலை சுருட்டை நோய் ஆகியவற்றை கட்டுப்படுத்தலாம். வேப்பம் புண்ணாக்கு சாறு மூலம் தக்காளி இலைப்புள்ளிநோய், நெல் தோகை அழுகல் நோயை கட்டுப்படுத்தலாம்.

வயல் ஓரங்கள், தரிசு நிலங்கள், மற்ற இடங்களில் வேம்பை வளர்த்து பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு மேச்சேரி வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மணப்பந்தல்

**மணமகள் தேவை**

**தமிழ்**

பிராமின் வயது 53
அரசுபணி மாத வருமானம்-
90000 மறுமணம், விதவை,
Divorcees மற்றும் குழந்தை
உள்ளவர்கள் சம்மதம்.
Contact No:95003 93990,
75980 93646 புரோக்கர்கள்
தவிர்க்கவும்.

MBA / 33 yrs / Male / 42 LPA seeks qualified Hindu girl contact: 95438 15803

# பிஹார் தேர்தல் முடிவுகள் தமிழகத்திலும் எதிரொலிக்கும்

### பாஜக மாநில துணைத் தலைவர் தகவல்

**நாமக்கல்**

பிஹார் மாநில தேர்தல் முடிவு தமிழகத்திலும் எதிரொலிக்கும். பாஜக, அதிமுக கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்று தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் என பாஜக மாநில துணைத் தலைவர் வி.பி.துரைசாமி தெரிவித்தார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட பாஜக சார்பில் பிஹார் மாநில தேர்தல் வெற்றிக் கொண்டாட்டம் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர் பகவான் பிர்சா முண்டாவின் 150-வது பிறந்த நாள் விழா நாமக்கல் மணிக்கூண்டு அருகில் நடைபெற்றது. மாவட்ட பாஜக தலைவர் சரவணன் தலைமை வகித்தார்.

பாஜக மாநில துணைத்தலைவரும், ராசிபுரம் சட்டப்பேரவை தொகுதி தேர்தல் பொறுப்பாளருமான வி.பி.துரைசாமி கலந்துகொண்டு பிர்சா முண்டாவின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் பாஜக கூட்டணி மிகப்பெரிய வெற்றியை பெற்றுமீண்டும் ஆட்சி அமைக்கிறது. இந்த வெற்றி தமிழகத்திலும் எதிரொலிக்கும். நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலில் பாஜக, அதிமுக கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்று தமிழகத்தில் ஆட்சியை அமைக்கும்.

இந்தியாவை பிரதமர் மோடி வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்கிறார். இதை தமிழக இளைஞர்களும், பெண்களும் பொதுமக்களும் மிகவும் விரும்புகின்றனர். எனவே பிஹார் சட்டப்பேரவை தேர்தலைப்போல் தமிழக சட்டப்பேரவை தேர்தலிலும் பாஜக கூட்டணி இமாலய வெற்றிபெற்று தமிழகத்தில் ஆட்சி அமைக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக நாமக்கல் கிழக்கு மாவட்ட பாஜகவினர் பட்டாசு வெடித்தும், மக்களுக்கு இனிப்பு வழங்கியும் வெற்றியைக் கொண்டாடினர். மாவட்ட எஸ்டி அணி தலைவர் கார்த்திகேயன், மாவட்டச் செயலாளர் சரவணன், மாவட்ட பாஜக துணைத்தலைவர் அருள், மத்திய அரசு நலத்திட்ட மாவட்ட அமைப்பாளர் சதீஷ், நகர தலைவர் தினேஷ், ராதிகா, வேல்ராஜ், மணிவேல்குமார், நகர பொதுச்செயலாளர் சதீஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



பிஹார் மாநில தேர்தல் வெற்றியை தொடர்ந்து நாமக்கல் மணிகூண்டு அருகில் பாஜக மாநில துணைத் தலைவர் துரைசாமி தலைமையில் அக்கட்சியினர் மக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

### சேலம், ஈரோடு மாவட்டங்களில் நடைபெற்ற

# ஆசிரியர் தகுதி தேர்வில் 6,714 பேர் பங்கேற்பு

**சேலம்/ஈரோடு**

சேலம், ஈரோடு மாவட்டங்களில் நடைபெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் 6,714 பேர் பங்கேற்றனர்.

சேலம் மாவட்டத்தில் 12 மையங்களில் இடைநிலை ஆசிரியர் பணி நாடுநர்களுக்கான ஆசிரியர் தகுதித்தேர்வு (தாள் 1) நேற்று நடந்தது இத்தேர்வுக்கு 4,646 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 3,999 பேர் தேர்வில் பங்கேற்றனர். மரவனேரி பாரதி வித்யாலயா மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தில் ஆட்சியர் பிருந்தா தேவி ஆய்வு மேற்கொண் டார்.

பின்னர் அவர் கூறுகையில், "ஆசிரியர் தகுதித்தேர்வுக்காக 12 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு, முதன்மை கண்காணிப்பாளர்கள், துறை அலுவலர்கள், ஆசிரியர்கள், அறை கண்காணிப்பாளர்கள், சொல்வதை எழுதுபவர்கள் மற்றும் நிலையான பறக்கும் படை அலுவலர்கள் என 300-க்கும் மேற்பட்டோர் பணியமர்த்தப்பட்டு, தேர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன" என்றார். ஆய்வின்போது, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மகேஸ்வரி உடனிருந்தார்.

**ஈரோட்டில்...**

ஈரோடு மாவட்டத்தில் 13 மையங்களில் ஆசிரியர் தகுதித் தேர்வு நடைபெற்றது. இத்தேர்வில் பங்கேற்க 3,279 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், 2,715 பேர் மட்டுமே தேர்வெழுதினர். தேர்வுக்கு 564 பேர் வரவில்லை.

## இன்று டிஎன்பிஎஸ்சி தேர்வு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் (டிஎன்பிஎஸ்சி) நடத்தப்படும் ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வு இன்று (16-ம் தேதி) நடைபெறுகிறது. இத்தேர்வை சேலம் மாவட்டத்தில் 2,416 பேர் எழுத உள்ளனர். சேலம், சேலம் மேற்கு, சேலம் தெற்கு, ஓமலூர், சங்ககிரி, வாழப்பாடி ஆகிய வட்டங்களில் உள்ள 7 மையங்களில் தேர்வு நடைபெறவுள்ளது. மையங்களுக்கு தேர்வர்கள் செல்வதற்கு ஏதுவாக அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன, என ஆட்சியர் பிருந்தாதேவி தெரிவித்துள்ளார்.

**வரி விளம்பரங்கள்**

**தொழில்**

**முகவர்கள் தேவை**

Join Us for a Profitable Joint Venture! Landowners with 1 Ground to 5 Acres — partner with Jentora for premium residential and commercial developments.Call/WhatsApp: 7358582976, Jentora Builders Pvt. Ltd.

**வாடகை**

**வாடகைக்கு**

For Rent – 1000 sq. ft. Commercial Space, Cherry Road, Near Eswaran Temple, Salem. Prime area. Rs.25,000. Contact 9080892046.

## வியர்க்குதே

**வீரபாண்டி**

சேலத்தை அடுத்த வீரபாண்டி துணை மின்நிலையத்தில் பராமரிப்பு பணி நாளை (17-ம் தேதி) மேற்கொள்ளப்படுகிறது. எனவே, ஆட்டையாம்பட்டி, வேலநத்தம், மருளையம்பாளையம், பெத்தாம்பட்டி, ராஜாபாளையம், கூலிப்பட்டி, எட்டி மாணிக்கம்பட்டி, ராக்கிப்பட்டி, சென்னகிரி, முத்தனம் பாளையம், ஏரிக்காடு, வீரபாண்டி, பாலம்பட்டி, கோணைய நாயக்கனூர், அரசம்பாளையம், புதுப்பாளையம், பைரோஜி, உத்தமசோழபுரம், அரியானூர், சீரகாப்பாடி, சித்தனேரி, வடுகம்பாளையம் ஆகிய பகுதிகளில் நாளை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் விநியோகம் இருக்காது, என சேலம் தெற்கு கோட்ட மின்வாரிய அலுவலக செயற்பொறியாளர் அன்பரசன் தெரிவித்துள்ளார்

### தொல்குடி தினத்தை முன்னிட்டு

# சேலத்தில் பழங்குடியினர் வசிக்கும் 24 ஊராட்சிகளில் கிராம சபை கூட்டம்

### புழுதிக்குட்டையில் ஆட்சியர் பங்கேற்பு

**சேலம்**

தொல்குடி தினத்தை முன்னிட்டு, சேலம் மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கும் காடையாம்பட்டி, வாழப்பாடி, அயோத்தியாப்பட்டணம், கெங்கவல்லி, கொளத்தூர், பனமரத்துப்பட்டி, பெத்தநாயக்கன்பாளையம், ஏற்காடு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 24 ஊராட்சிகளில் சிறப்பு கிராம சபை கூட்டங்கள் நடத்தப் பட்டன.

வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம், புழுதிக்குட்டையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ஆட்சியர் பிருந்தாதேவி பார்வையாளராக பங்கேற்றார்.

பின்னர் கிராம சபை கூட்டத்தில் ஆட்சியர் பேசியதாவது:

கிராம சபை கூட்டத்தில் பழங்குடியினர் சமூக நலத்திட்டங்கள் குறித்து விவாதித்தல், பிரதான் மந்திரி ஜன்ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான் திட்டத்தின் கீழ் 2023- 2024-ம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட பணிகள் முன்னேற்ற அறிக்கை குறித்து விவாதித்தல், ஊரக வேலை உறுதி திட்டம், பழங்குடியினர், பெண்கள், மாற்றுத் திறனாளிகள் தொடர்பான நலத்திட்டங்கள் குறித்து விவாதித்தல், குடிநீர் திட்டங்கள், சாலை, தெருவிளக்கு வசதி மற்றும் இணைய இணைப்பு நிலை குறித்து விவாதிக்கப்பட்டது.

குறிப்பாக பழங்குடியினர் கல்வி மற்றும் சுகாதாரம் குறித்து விவாதித்தல், பெண்கள் சுயஉதவி குழு நடவடிக்கைகள், வங்கி கடன், வருமானம் உருவாக்கும் செயல்பாடுகள் குறித்து விவாதித்தல் உள்ளிட்டவை குறித்து பொதுமக்கள் மத்தியில் விவாதிக்கப்பட்டது. பழங்குடியின மக்களின் தியாகங்களை நினைவுகூர்தல் வகையில் பழங்குடியினர் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது, என்றார்.

கிராம சபை கூட்டத்தில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அருளாளன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண் டனர்.




தொல்குடி தினத்தையொட்டி, வாழப்பாடியை அடுத்த புழுதிக்குட்டையில் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் ஆட்சியர் பிருந்தாதேவி பார்வையாளராக பங்கேற்று, மக்களிடையே பேசினார்.

**படிவம் G-க்கான இணைப்பு**
**ரன் இந்தியா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தீர்வு செயல்பாட்டில்**
(திவால்நிலை மற்றும் திவால்நிலைகுழு ஆப் இந்தியா (நிறுவனங்களின் கலைப்பு செயல்முறை) விதிமுறைகள், 2016-ன் ஒழுங்குமுறை 36A-ன் துணை-பிரிவு(1)-ன்கீழ்) காலக்கெடுவை நீட்டிப்பதற்காக 31.10.2025 அன்று வெளியிடப்பட்ட படிவம் G-ன் பிற்சேர்க்கையாகும்
**திருத்தப்பட்ட காலக்கெடுவின் விவரம் பின்வருமாறு**

| வ. எண். | தொடர்புடைய விபரங்கள் | |
|---|---|---|
| 1. | விருப்ப வெளிப்பாடு கோருதல் பெறுவதற்கான கடைசி தேதி | 01.12.2025 |
| 2. | வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வெளியிடப்படும் தேதி | 05.12.2025 |
| 3. | தற்காலிக பட்டியலில் ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 10.12.2025 |
| 4. | வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் தேதி | 12.12.2025 |
| 5. | தகவல் குறிப்பாணை வெளியிடப்பட்ட தேதி மதிப்பீட்டு அணி மற்றும் வருங்கால தீர்மான மனுதாரர்களுக்கு தீர்வுத் திட்டத்திற்கான கோரிக்கை | 12.12.2025 |
| 6. | தீர்மான திட்டங்களை சமர்ப்பிப்பு கடைசி நாள் | 12.01.2026 |
| 7. | விருப்ப வெளிப்பாடு சமர்ப்பிக்க வேண்டிய மின்னஞ்சல் id | cirp.ranindia@gmail.com |

**குறிப்பு :** இந்த வெளியீட்டால் குறிப்பாக திருத்தப்படாத மற்ற அனைத்து விவரங்களும் 31.10.2025 தேதியிட்ட படிவம் G -ன்படி அப்படியே இருக்கும்.

Sd/-
P பாலசுப்பிரமணியன்
ரன் இந்தியா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்கான தீர்மான நிபுணர்
IBBI பதிவு எண். : IBBI/IPA-001/IP-P-02867/2024-2025/14404
AFA செல்லுபடியாகும் காலம் டிசம்பர் 31, 2025
85/3, சுக்காலியூர், கருப்பம்பாளையம் கிராமம், கரூர், தமிழ்நாடு, 639003
நாள் : 16.11.2025, இடம் : கரூர்

தமிழ்நாடு அரசு
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை**
**செங்கல்பட்டு மாவட்டம்**

மின்னணு முறையில் இரு உறைமுறை அடிப்படையிலான ஒப்பந்த அழைப்பு
ந.க.எண் 0258/2020/அ11 நாள். 14.11.2025

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) / பகுதி II/இன் மூலம் செங்கல்பட்டு மாவட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியம், சீக்கினாங்குப்பம் கிராம ஊராட்சி, சிக்கினாங்குப்பம் கிராமத்தில் மலக் கசடு மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யும் நிலையக் கட்டடம் (10 KLD அளவு) கட்டும் பணி

1. ஒப்பந்த அழைப்பிற்கான தோராய மதிப்பீடு ரூ. 284.90 லட்சம்
2. செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்புத் தொகை ரூ.2,85,000/-
3. ஒப்பந்த நமூனாக்களை மின்னணு கொள்முதல் முறையில் www.tntenders.gov.in என்னும் இணையத்தளத்தில் 17.11.2025 முதல் 03.12.2025 வரையிலான காலத்தில் பதிவேற்றம் செய்யலாம்.
4. ஒப்பந்த நமூனா இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய இறுதிநாள் மற்றும் நேரம் : 03.12.2025 பி.ப. 3.00 மணிவரை.
5. ஒப்பந்த நமூனாக்களின் தொழில்நுட்ப உறைகள் மின்னணு முறையில் பதிவிறக்கம் செய்யப்படும் நாள் மற்றும் நேரம். 03.12.2025 பி.ப. 5.00 மணிமுதல்.
6. முழுமையான விவரங்கள் சம்மந்தப்பட்ட ஒப்பந்த நமூனாக்களில் www.tntenders.gov.in என்னும் இணையத்தளத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது

திட்ட இயக்குனர்,
மா.ஊ.வ.முகமை, செங்கல்பட்டு.
செ.ம.தொ.இ/6176/ஒப்பந்தப்புள்ளி/2025

இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun on behalf of KSL MEDIA LIMITED and Printed by M Jegadesh Kumar at THG PUBLISHING PVT.LTD. 391/1 & 391/2 Kamaraj Road, Uppilipalayam, Coimbatore, Tamil Nadu 641015. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).

CB-SM

## ADDENDUM TO FORM G

**IN THE CORPORATE RESOLUTION PROCESS OF RAN INDIA STEELS PRIVATE LIMITED**

(Under sub-regulation (1) of regulation 36A of the Insolvency and Bankruptcy Board of India (Insolvency Resolution Process for Corporate Persons) Regulations, 2016)

This is an Addendum to Form G published on October 31, 2025 in Business Standard News Paper for extension of timelines. **The revised timelines shall be as follows**

| SL. | RELEVANT PARTICULARS | |
|---|---|---|
| 1. | Last date for receipt of expression of interest | December 01, 2025 |
| 2. | Date of issue of provisional list of prospective resolution applicants | December 05, 2025 |
| 3. | Last date for submission of objections to provisional list | December 10, 2025 |
| 4. | Date of issue of final list of prospective resolution applicants | December 12, 2025 |
| 5 | Date of issue of information memorandum, evaluation matrix and request for resolution plans to prospective resolution applicants | December 12, 2025 |
| 6. | Last date for submission of resolution plans | January 12, 2026 |
| 7. | Process email id to submit Expression of Interest | cirp.ranindia@gmail.com |

**Note:** All other details not specifically amended by this publication shall remain same as per the Form G dated October 31, 2025

Sd/-
P Bala Subramanian
Resolution Professional of Ran India Steels Private Limited
IBBI Registration No. IBBI/IPA-001/IP-P-02867/2024-2025/14404
AFA valid up to December 31, 2025
85/3, Sukkaliyur, Karuppampalayam Village,Karur, Tamil Nadu - 639003
Date: November 16, 2025, Place: Karur

---

**BEFORE THE HON'BLE 1ST ADDL. PRINCIPAL JUDGE FAMILY COURT AT BENGALURU**

**M.C. No. 88/2025**

**BETWEEN : Smt. C. Indira Devi...Petitioner**
**AND : Sri. Raja alias Rajendran ...Respondent**

**NOTICE TO THE RESPONDENT BY WAY OF PAPER PUBLICATION**

To : **Sri. RAJA ALIAS RAJENDRAN,** S/o. Achudan. S, Aged about 65 Years, Residing at Veerangavedu Murgesan Street, Seven Wells, Chennai, Tamil Nadu - 600001.

WHEREAS the petitioner in the above petition has filed the above petition for dissolution of the marriage and the petition filed U/S. 13 (1) (i-a) & 13 (1) (i-b) of Hindu Marriage Act, 1955. You are hereby summoned to appear in person before this Hon'ble I Addl. Principal Judge, Family Court, at Bengaluru.

Take Notice that in default of your appearance on the day of **16-12-2025 at 11-00 A.M.** to showcase against the petition failing wherein the said petition will be heard and decided in your absence/Exparte.

Given under my hand and seal of this Hon'ble Court on 15th October 2025.

**By order of the Court, Sheristedar, Family Court, Bengaluru.**
ADVOCATE FOR THE PETITIONER
**M/s. Legal Aid Trust**
**by Dr. Vidya Selvamony,** Advocate, Office Unit at No. 201, 2nd Floor, MSR Complex, Hormavu Main Road, Bengaluru-560043. Mob: 9448276715

---

Navigate markets with focused insight.

Get daily sector trends, market movers, and sharp insights — *every day* with **The Compass** in Business Standard.

To book your copy, SMS **reachbs** to **57575** or email **order@bsmail.in**

Business Standard
Insight Out

---

## Aditya Birla Housing Finance Limited

**ADITYA BIRLA CAPITAL**

**Registered Office- Indian Rayon Compound, Veraval, Gujarat – 362266 Branch Office- M-7, Sai Sagar Building, Thiru Vee Ka Industrial Estate, Guindy, Chennai – 600032**

**APPENDIX IV[See Rule 8 (1) of the Security Interest (Enforcement) Rules, 2002]**
**Possession Notice(for Immovable Property)**

